**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 89 **நாள்:** 10.02.2026

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ் 1,881 கல்லூரி மாணவியருக்கு மடிக்கணினிகளை இன்று வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (10.02.2026) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், கே.பி.தாசன் சாலையில் உள்ள நீதிபதி பஷீர் அஹமத் சயீத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற "உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ், 1,881 கல்லூரி மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு, கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 05.01.2026 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் உயர்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தில் 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் முதற்கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகளை கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.

அவ்வாறாக, தமிழகம் முழுவதும் உயர்கல்வி பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று, இக்கல்லூரியில் உள்ள 1,881 கல்லூரி மாணவியருக்கு மடிக்கணினிகள் வழங்கப்படுகிறது. இன்று காலையில் மேடவாக்கத்தில் உள்ள காயிதே மில்லத் கல்லூரியில் பயிலும் 881 மாணவியருக்கும், நேற்று குருநானக் கல்லூரியில் பயிலும் 2,040 மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கியதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பொழுது இந்த கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கி ற இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் நான் பங்கேற்பது என்பது உண்மையில் மிகப்பெரிய அளவிலான மனநிறைவைத் தருகின்ற ஒரு செய்தியாகும். மரியாதைக்குரிய இந்த கல்லூரியின் பேராசிரியர் பர்வீன் சுல்தானா அவர்கள் கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இந்த கல்லூரியில் நடைபெறுகின்ற மடிக்கணினிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு வரவேண்டும் என்று அழைத்தார்கள். உடனடியாக நானும் நிச்சயம் வருகிறேன் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரோடு வருகிறேன் என்று

தெரிவித்தேன். அந்த வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்.

இந்த கல்லூரி ஒரு புகழ்பெற்ற சென்னையின் அடையாளங்களில் ஒன்றாகவும் தமிழகத்தின் புகழ்மிக்க அடையாளங்களில் ஒன்றாகவும் இன்றைக்கு கருதப்பட்டு வருகிறது.

SIET, எத்திராஜ், ஸ்டெல்லா மேரிஸ் போன்ற, லயோலா போன்ற புகழ்பெற்ற கல்லூரிகள் இன்றைக்கு தமிழகத்தின் கல்வித்துறைக்கு எடுத்துக்காட்டாக இருந்து வருகிற நிர்வாகங்கள். அதில் SIET கல்லூரி என்பது மிகப்பெரிய அளவிலான புகழின் உச்சத்தில் இருக்கிற கல்லூரிகளில் ஒன்று. இந்த கல்லூரியின் பழைய மாணவியர்களின் பட்டியலை எடுத்துப் பார்த்தால் மிகப்பெரிய அளவிலான ஆளுமை மிக்க மாணவியர் இந்த கல்லூரியில் இருந்து பயின்று சென்றிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஏறத்தாழ 70 ஆண்டுகளைக் கடந்து பவள விழாவை நோக்கி பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிறது இந்தக் கல்லூரி நிர்வாகம்.

2022-இல் தமிழ்நாடு அரசின் சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு துறையின் சார்பில் மிகச் சிறப்பான வகையில் தன்னுடைய பங்களிப்பை ஆற்றி வரும் கல்லூரி என்று சொல்லி, 'பசுமை சாம்பியன்' (Green Champion) என்கின்ற விருதை இந்தக் கல்லூரி பெற்றிருக்கிறது என்பது நாம் பெருமைப்படத்தக்க ஒன்று.

மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சராக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், இன்றைக்கு அரசு நிதி உதவி பெறுகிற பள்ளிகளாக இருந்தாலும், அரசு நிதி உதவி பெறுகிற கல்லூரி அமைப்புகளாக இருந்தாலும், அரசின் திட்டங்கள் எல்லாமே அந்த நிர்வாகங்களுக்கும் இன்றைக்கு முழுமையாகச் சென்றடைந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு பள்ளிகளில் படித்தவர்களுக்கு மட்டுமல்ல, அரசு நிதி உதவி பெற்ற பள்ளிகளில் படித்த மாணவியர்களுக்கும் இந்த 1,000 ரூபாய் திட்டம் செல்லும் என்று அறிவித்து, இன்றைக்கு மாணவிகளுக்கு 'புதுமைப் பெண்', மாணவர்களுக்கு 'தமிழ்ப் புதல்வன்' என்கின்ற இரு திட்டங்களின் வாயிலாக தமிழ்நாட்டில் இன்று 12 லட்சம் மாணவ மாணவியர் மாதந்தோறும் 1,000 ரூபாய் பெற்று உயர்கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல் தான் இன்றைக்கு இந்த மடிக்கணினி வழங்கும் திட்டமும் கூட, அரசு கல்லூரிகளில் மட்டுமல்ல, அரசு உதவி பெறுகின்ற, நிதி உதவி பெற்று நடத்தப்பட்டு கொண்டிருக்கின்ற கல்லூரிகளுக்கும் இந்தத் திட்டம் இன்றைக்கு செயலாக்கத்திற்கு வந்திருக்கிறது.

இன்றைக்கு தமிழ்நாட்டின் உயர்கல்வி வளர்ச்சி, உயர்கல்வி தேர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. உயர்கல்வியின் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. நீங்கள் கூட கேட்கலாம் அப்படியானால் இந்தியாவின் ஒட்டுமொத்த உயர்கல்வியில் சேரும் சதவீதம் என்று எடுத்துக் கொண்டால் 28.4 சதவீதம். இந்தக் கணக்கை நாங்கள் சொல்லவில்லை, உயர்கல்வியில் சேருபவர்களுடைய இந்த சதவீதம் என்பது 28.4 சதவீதம் என்பதை ஒன்றிய அரசின் புள்ளிவிவரப்படி இன்றைக்கு அவர்கள் இந்தக் கணக்கைத் தெரிவித்திருக்கிறார்கள்.

India Economic Survey 2024-25 என்கின்ற கணக்கின்படி இந்தியாவில் உயர்கல்வியில் சேருபவர்களின் எண்ணிக்கை 28.4; அதே நேரத்தில் தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சேருபவர்களின் எண்ணிக்கை 47 சதவீதம். ஒன்றிய அரசின் சதவீதத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு தமிழ்நாட்டில் உயர்கல்வியின் சேர்க்கை விகிதம் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான மிக முக்கியமான காரணம் நான் ஏற்கனவே சொன்ன 'தமிழ்ப் புதல்வன்', 'புதுமைப் பெண்' ஆகிய திட்டங்களோடு சேர்த்து 'நான் முதல்வன்' என்கின்ற ஒரு மகத்தான திட்டம்.

இந்த 'நான் முதல்வன்' என்கின்ற மகத்தான திட்டத்தின்படி இன்றைக்கு தமிழ்நாட்டில் 42 லட்சம் மாணவ மாணவியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சியைப் பெறுவது, உயர்கல்விக்கான வழிகாட்டுதலைப் பெறுவது, மேலை நாடுகளில் வேலைவாய்ப்பைப் பெறுவது, மேலை நாடுகளிலும் பயிற்சியினைப் பெறுவது என்று 42 லட்சம் மாணவ மாணவியர் பயன்பெற்று வருகிறார்கள். ஒரு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் அந்த 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் ஜப்பானிலே இருக்கிற 'நெக்ஸ்ட் ஜென்' (NextGen) என்கின்ற ஒரு நிறுவனத்தில் தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து மாணவிகள் இன்றைக்கு பணியமர்த்தப்பட்டு ஆண்டுக்கு 21 லட்சம் ரூபாய் சம்பளம் என்கின்ற வகையில் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் அதே ஜப்பானில் டோக்கியோவில் இருக்கிற கியோட்டோ பல்கலைக்கழகத்தில் ஒரு பயிற்சிக்கு நான்கு மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயோடெக்னாலஜி (Biotechnology) சார்ந்த ஆராய்ச்சிப் பயிற்சி பெற்று, இன்றைக்கு அதன் மூலம் அந்தப் பயிற்சியை இந்தியாவிலும் தொடர ஐஐடி ரூர்க்கேலாவில் (IIT Roorkee) இன்றைக்கு அந்தப் பயிற்சியைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படி உலக அளவில் நம்முடைய மாணவிகள் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு 'நான் முதல்வன்' திட்டம் இன்றைக்கு காரணமாக இருக்கிறது.

இங்கே வருகை தந்திருக்கின்ற மாணவியர்களுக்கு இன்னும் ஒரு கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், இப்பொழுது உங்கள் கைகளில் தரப்படவிருக்கின்ற இந்த மடிக்கணினி என்பது வெறும் மடிக்கணினி மட்டுமல்ல என்பதை நீங்கள் உங்களுக்குத் தெரியுமா என்று எனக்குத் தெரியவில்லை. மடிக்கணினியோடு சேர்த்து 'பெர்ப்ளெக்சிட்டி ப்ரோ' (Perplexity Pro) என்கின்ற ஒரு டூல் (Tool) அதில் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த பெர்ப்ளெக்சிட்டி

என்கின்ற இந்த டூலை நீங்கள் மாதந்தோறும் சந்தாவாகப் பெற வேண்டும் என்று சொன்னால் 1,950 ரூபாய் ஒரு மாதத்திற்குச் சந்தாவாகச் செலவாகும்.

ஆனால் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் உயர்கல்வி பயிலும் மாணவ-மாணவியர்கள் மேல் கொண்டிருக்கின்ற அக்கறையின் காரணமாய், இந்த பெர்ப்ளெக்சிட்டி ப்ரோ என்கின்ற அந்த ஏஐ (AI) தளத்தை உங்களுக்குக் கட்டணமில்லாமல் ஆறு மாதக் கட்டணத்தைக் கட்டி உங்களோடு இதோடு இணைத்துத் தருகிறார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த பெர்ப்ளெக்சிட்டி ப்ரோ என்பதன் முக்    ய நன்மைகள்:

- மேம்பட்ட ஏஐ மாதிரிகள் (Advanced AI Models)
- கோட் இன்டர்பிரெட்டேஷன் (Code Interpretation)
- சிறந்த ஆய்வுகளுக்கான ரிசர்ச் (Research)
- மிக விரிவான பிராக்டிகலி அன்லிமிடெட் (Practically Unlimited) வசதி
- ப்ரோ மாணவர்களுக்கான பிரயாரிட்டி சப்போர்ட் (Priority Support)
- விளம்பரம் இல்லா சேவை (Ads-free service)
- ஏஐ திட்டங்கள் அல்லது உள்ளடக்கப் பகுப்பாய்வில் ஈடுபடுதல்
- மென்பொறியாளர்கள் (Software Developers) மற்றும் கிரியேட்டர்களுக்கு (Creators) ஏற்ற ஸ்பேஸ் (Space) போன்ற ஒத்துழைப்பு வசதிகள்
- இலவசப் பதிப்புகளுடன் ஒப்பிடுகையில் அதிக ஆழமான தகவல்களையும் தெளிவான பகுப்பாய்வையும் வழங்குகிற வசதி

இவை அனைத்தையும் உள்ளடக்கித்தான் இன்றைக்கு இந்த மடிக்கணினிகள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நிச்சயம் இவைகளின் மூலம் எதிர்காலத்தில் உங்களுடைய கல்வி மேம்பாட்டிற்கு, உயர்கல்வியின் வளர்ச்சிக்கு இந்த மடிக்கணினிகள் பெருந்துணையாக இருக்கும்." எனத் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**